සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**43 T I**

| வினாத்தாள் | புள்ளிகள் |
|---|---|
| I | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

**10.12.2019 / 0830 - 0930**

| | |
|---|---|
| பரீட்சகர் 1 | |
| பரீட்சகர் 2 | |
| எண்கணிதப் பரிசோதகர் | |

චිත්‍ර I
**சித்திரம் I**
Art I

පැය එකයි
**ஒரு மணித்தியாலம்**
*One hour*

**சுட்டெண் :.................................**

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

- கீழே தரப்பட்டுள்ள ஒளிப்படத்தைப் பயன்படுத்தி **1** தொடக்கம் **5** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.



**1.** கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீஸ மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட இது ................................ விகாரை எனப்படும்.

**2.** இவ்விகாரையும் அதில் காணப்படும் செதுக்கல்களும் ............................................ காலப்பகுதிக்கு உரியவையாகும்.

**3.** இங்கு காணப்படும் சதுர வடிவ கற்றகட்டுச் செதுக்கலான ............................................ செதுக்கலின் மூலம் குப்த கலைப் பண்புகள் சித்திரிக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

**4.** இங்குள்ள பாறைச் செதுக்கல்களிடையே நீராடும் யானைகள், ............................................ என்பன மிக உன்னதமான படைப்புகளாகும்.

**5.** இச் செதுக்கல்களில் குப்த கலை மரபும் ................................................... கலை மரபும் காணப்படுவதாகக் கருதப்படுகிறது.

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

**6.** சேனாதிலங்கார என்ற அமைச்சரின் வழிகாட்டலில், கம்பளை லங்காதிலக விகாரையை நிர்மாணித்த கட்டடக் கலைஞர் யார்?

..........................................................................................................

**7.** கே. கனகசபாபதி என்ற கலைஞரால் படைக்கப்பட்ட 'கோழிச்சண்டை' எனும் ஓவியம் எந்த கலை மரபை வெளிப்படுத்துகிறது?

..........................................................................................................

**8.** 43 ஆம் குழுக் கலைஞர்களைச் சித்திரிக்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கேலிச்சித்திரத்தை (கார்டூன்) வரைந்த கலைஞர் யார்?

..........................................................................................................

**9.** இலங்கையின் சமூகப் பின்னணியைச் சித்திரிக்கும் விதத்திலான கிறிஸ்தவ சமய நிகழ்வுகள் கண்டியில் அமைந்துள்ள எந்த தேவாலயத்தில் வரையப்பட்டுள்ளன?

..........................................................................................................

**10.** கண்டிய (மத்திய கண்டி) ஓவியப் பாரம்பரியத்துக்குரிய ஓவியங்களைக் கொண்ட மெதவல விகாரையானது எந்த விகாரைத் தொகுதிக்குரியதாகும்?

..........................................................................................................

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ் கோடிடுக.

**11.** அனுராதபுர அபயகிரி விகாரை வளாகத்தில் காணத்தக்க சமாதி புத்தர் சிலையானது
(1) கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகும்.
(2) தியான முத்திரையையும் வீராசன முறையையும் கொண்டமைந்துள்ளதாகும்.
(3) உடலோடு ஒட்டிய அலைவடிவ ஆடைச் சுருக்கத்தைக் கொண்டுள்ளதாகும்.
(4) அமராவதி பாரம்பரிய கலைப் பாணிக்கமைய செதுக்கப்பட்டுள்ளதாகும்.

**12.** பொலன்னறுவையில் காணப்படும் 2 ஆம் சிவன் கோயிலானது
(1) தென்னிந்திய பாண்டிய கட்டடக்கலை நுட்பங்களுக்கமைய நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) கி.பி. 13 ஆம் நூற்றாண்டிற்குரிய மிகப் பழமையான கோயிலாகும்.
(3) ராஜராஜசோழனின் மனைவியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும்.
(4) ராஜேந்திரசோழனால் தனது வெற்றியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும்.

**13.** 'பாறைகளில் கன்னி' எனும் லியானாடோ டாவின்சியின் ஓவியம் காணக்கிடைப்பது
(1) புனித மேரி டெலா கிரேசி தேவாலய வளாகத்தில் ஆகும்.
(2) புனித சிஸ்டைன் தேவாலயத்தில் ஆகும்.
(3) லண்டன் தேசிய நூதனசாலையில் ஆகும்.
(4) பிரான்சிலுள்ள லூவர் நூதனசாலையில் ஆகும்.

**14.** லவகூன் என்ற சிற்பத்தினால் சித்திரிக்கப்படுவது
(1) ஹெலனிஸ்டிக் காலப்பகுதிக்குரிய கலைப் பண்புகளாகும்.
(2) கிரேக்க கலைப் படைப்புகளின் அடிப்படைப் பண்புகளாகும்.
(3) மேன்மைக் காலத்திற்குரிய கலைப் பண்புகளாகும்.
(4) கிரேக்க யதார்த்த பாரம்பரியத்திற்குரிய பண்புகளாகும்.

**15.** பொலன்னறுவையிலுள்ள கல்விகாரை அல்லது உத்தராராமய எனப்படுவது
(1) பல்லவ செல்வாக்குடன் நிர்மாணிக்கப்பட்ட சிலைமனையாகும்.
(2) ஒத்த பண்புகளையுடைய நான்கு சிலைகளைக் கொண்டதொரு இடமாகும்.
(3) பராக்கிரமபாகு மன்னனின் காலப்பகுதியில் கற்பாறையில் நிர்மாணிக்கப்பட்ட விகாரைத் தொகுதியாகும்.
(4) மகாயான பௌத்த எண்ணக்கருவின் அடிப்படையில் கட்டப்பட்ட சிலைமனை (பட்டிமாகர) ஆகும்.

● **16** தொடக்கம் **20** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லினதும் கருத்தை விளக்கும் வகையில் முழுமையான ஒரு வாக்கியம் வீதம் எழுதுக.

**16.** மினாரத் :..........................................................................

**17.** திரிங்குதலய :..........................................................................


**18.** பன் பாய் :..........................................................................


**19.** கோபுரம் :..........................................................................

**20.** கோன் அரக்கு :..........................................................................

● **21** தொடக்கம் **25** வரையில் தரப்பட்டுள்ள ஒளிப்படப் பகுதிகளுடனான நெருங்கிய தொடர்பைக் காட்டும் உருவை, எதிரிலுள்ள **A, B, C, D, E** ஆகிய உருக்களிலிருந்து தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் ஆங்கில எழுத்தினைப் **புள்ளிக்கோட்டின்மீது** எழுதுக.

**21.**  (.........)


 A


**22.**  (.........)

 B

**23.**  (.........)

 C

**24.**  (.........)

 D

**25.**  (.........)

 E

● **26** தொடக்கம் **30** வரையான ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல் / சொற்களை இட்டுப் பூரணப்படுத்துக.

**26.** சிவபெருமானின் முன்மாதிரியாகக் கருதப்படும் 'கொம்புக் கடவுளைச்' சித்திரிக்கும் முத்திரையானது ............................................... எனப்படும்.


**27.** தாமரைத் தண்டின் வடிவத்தை அழகியல் நுட்பத்துடன் பயன்படுத்தியுள்ள பொலன்னறுவைக் காலக் கலைஞர்களின் தனித்துவமான படைப்பானது ............................................... இல் காணப்படுகின்றது.

**28.** கண்டிய காலத்திற்குரிய தம்புள்ளை விகாரையின் ஓவியங்களை வரைந்த பெருமை ............................... ஓவியப் பரம்பரையினருக்கு உரித்தாகும்.


**29.** ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்ட கால ஓவியங்களிடையே 17 அடி நீளமான எருதின் உருவம் ............................................... குகையில் காணப்படுகிறது.

**30.** பொலன்னறுவை திவங்க சிலைமனையின் கருவறையில் காணத்தக்க ஓவியங்களிடையே தேவாராதனை, ............................................... என்பன மிகப் புராதன ஓவியங்களாகக் கருதப்படுகின்றன.

● **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்களுக்கு **F, G, H, I, J** ஆகிய ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.


F


G


H


I


J

**31.** **F** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இந்துசமயக் கடவுளின் உலோகச் சிலையானது எந்த நுட்பத்தைக் கையாண்டு உருவாக்கப்பட்டதாகும்?

..........................................................................................................................

**32.** **G** எழுத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கைப் பண்புகளைச் சித்திரிக்கும் காந்தாரச் சிலையானது எந்த மன்னனுடைய காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாகும்?

..........................................................................................................................

**33.** **H** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நீர்வர்ணச் சித்திரத்தை வரைந்த கலைஞர் யார்?

..........................................................................................................................

**34.** **I** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள, தனது எஜமான் சொல்வதைக் கேட்டு எழுதத் தயாராக இருக்கும் மனிதனைச் சித்திரிக்கும் எகிப்திய சிற்பமானது எந்த ஊடகத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது?

..........................................................................................................................

**35.** **J** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள அஜந்தாவின் 'அப்சரா' ஓவியமானது எவ்வகை வரைதல் நுட்பத்தைக் கையாண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது?

..........................................................................................................................

● உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வர்ண ஓவியத்தை இனங்கண்டு, அதன் கலைப் பண்புகளைப் பகுப்பாய்வு செய்யும் விதத்தில் **36** தொடக்கம் **40** வரையில் தரப்பட்டுள்ள உப தலைப்புகளுக்கமைவாக பொருளுள்ள **ஐந்து** வாக்கியங்கள் எழுதுக. (தனிச் சொல்லினால் விடையளித்தால் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

**36.** கலைஞர் தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**37.** கருப்பொருள் சித்திரிப்பு : ..........................................................................

..........................................................................

**38.** ஒழுங்கமைப்பு தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**39.** செல்வாக்கு தொடர்பாக : ..........................................................................

..........................................................................

**40.** உணர்வு வெளிப்பாடு : ..........................................................................

..........................................................................

✻ ✻ ✻

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## கல்வி பொதுத் தராதர பத்திர(சாதாரண தரம்) பரீட்சை

## டிசம்பர்-2016. (புதிய பாடத்திட்டம்)

# 43 – சித்திரம் 1,11,111

# புள்ளி வழங்கும் திட்டம்

சித்திரம் 1 : குறு வினாக்கள் 40 இனைக் கொண்ட பத்திரமாகும். வினாப் பத்திரத்திலேயே விடை எழுதுவதற்கு ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. சரியான விடைக்கு ஒரு புள்ளி வீதம் 40 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சித்திரம். 11 : செயன்முறை வினாப்பத்திரம். இதில் ஒரு செயற்பாட்டைக் கொண்ட வினா அடங்கியுள்ளது. அசையாப் பொருட்கூட்டம் சுயாதீன இரேகை வரைதல் என இவ்வினாப்பத்திரம் அறியப்படும். இவ்வினாப்பத்திரத்திற்கு 30 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

சித்திரம் 111 : இது ஒரு செயல்முறை வினாப்பத்திரமாகும். இது அ, ஆ, இ என மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்.

அ. கருத்துவெளிப்பாட்டுச் சித்திரம்

ஆ. ஆக்க அலங்கார சித்திரம்

இ. கிரபிக் சித்திரம்

மேற்படி தலைப்புக்களில் ஏதாவதொன்றை தெரிவு செய்து வரைந்து வர்ணம் தீட்டுதல் வேண்டும். இதற்கு 30 புள்ளிகள் கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## விடைகள் - பகுதி I

1. ஈசுருமுனிய விகாரை
2. அநுராதபுரம்
3. காதலர் சோடி (பெம்யுவன)
4. போர் வீரனும் குதிரைத்தலையும்
5. பல்லவ
6. ஸ்தபதிராயர்
7. கனவடிவம்/ கியூபிசம்
8. ஒப்றிகொலட்
9. திரித்துவ தேவாலயம்/ திறினிட்டி தேவாலயம்
10. டம்பிட்ட / தூண்விகாரை/ தூண்களின்மேல் அமைந்த
11. - 2
12. - 3
13. - 4
14. - 1
15. - 4
16. இஸ்லாமிய பள்ளி வாயில்களின் முன்னால் காணப்படும் உயரமானதூண்
17. வகதெக்க அலங்காரத்தின் விரிவானவடிவம் / புராதன சித்திர ஆசிரியரின் தமது மாணவர்களுக்கு இறுதியாகக் கற்பிக்கும் அலங்காரம்/ புராதன அலங்காரங்களில் ஒன்று
18. பாய் வகைகளில் ஒன்று/ தும்பறைப் பாய் கைத்தொழிலில் காணத்தக்க அலங்காரப் பாய்வகைகளில் ஒன்று
19. இந்து ஆலயங்களின் முகப்பில் சிற்பங்களால் நிறைந்து காணப்படும் உயரமான கட்டட அமைப்பு
20. கம்பட்டியா, கோன், ஹிந்துரு போன்ற மரங்களில் இருக்கும் பூச்சிகளால் வெளியாகும் ஒருவகைத் திரவம்.
    அரக்கு கைத்தொழிலில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்.
21. - D
22 .- C
23. - E
24. - A
25. - B
26. பசுபதி
27. நிஸங்கலதா மண்டபம்
28. நீலகம பரம்பரை
29. லாஸ்கோ குகை
30. சங்கிஸபுரத்திற்கு ஏணியில் இறங்கி வருதல்
31. வார்ப்பு/ உருக்கிவார்த்தல்
32. கனிஷ்க மன்னன்/ குஷானர்
33. G. S பெர்ணாந்து

34. சுண்ணக்கல்/ சுண்ணாம்புக்கல்
35. ரெம்பரா/ பிரஷ்கோசீகோ
36. பப்பலோ பிக்காசோ
37. ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரின் அவிக்னோன் எனும் வீதியில் உள்ள விலைமாதர்களை சித்திரித்தல்
38. கனவடிவ முறையில் வரையப்பட்டது
39. ஆபிரிக்க வேடமுகம் மற்றும் சிற்பக்கலையின் செல்வாக்குடன் ஒழுங்கமைக்கப்பட்டது.
40. அவிக்னோவின் விலைமாதர்களின் உள்ளார்ந்த சோகம் கவலை, வேதனைகளை சித்தரித்துள்ளமை.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அந்தரங்கமானது

இறுதிப் புள்ளிகளைத் தயாரித்தல்

**விசேட அறிவுறுத்தல்** :-

விடைத்தாள்கள் தமக்கு கிடைத்ததும் உரிய பரீட்சை இலக்கத்துக்குரிய சகல விடைத்தாள்களும் உள்ளனவா என பரீட்சித்துக் கொள்ளவும். புள்ளியிடும் சகல விடைத்தாள்களிலும் உதவிப் பரீட்சகர்களது குறியீட்டெண் எழுதப்படல் வேண்டும். வினாப்பத்திரம் 1 இற்கு பிழை இன்றி புள்ளிகளை இட்டு கிடைக்கப்பட்டுள்ள புள்ளிகளை சரியாகக் கூட்டி வினாப் பத்திரத்தின் மேல் மூலையில் எழுதவும்.

11ம்,111ம் விடைத்தாள்களுக்கு புள்ளிகள் இடும் போது சித்திரம் வரையப்பட்டுள்ள கடதாசியின் மறுபக்கத்தை பயன்படுத்தவும். இச்சித்திரங்கள் இரண்டிற்கும் புள்ளியிடும் போது நியதிகளின் அடிப்படையில் புள்ளிகளை வழங்குதல் வேண்டும். இதன் பொருட்டு நியதிகளின் இலக்கங்களை மட்டும் எழுதினால் போதுமானதாகும்.

உதாரணம் :-

| பத்திரம் 11 | |
|---|---|
| 1. | 03 |
| 2. | 03 |
| 3. | 04 |
| 4. | 03 |
| 5. | 03 |
| 6. | 04 |
| | 20 |

20 / 30

| பத்திரம் 111 | |
|---|---|
| 1. | 04 |
| 2. | 03 |
| 3. | 04 |
| 4. | 04 |
| 5. | 05 |
| | 20 |

20 / 30

சில உதவிப்பரீட்சகர்கள் நியதிகளின் அடிப்படையில் சித்திரங்களை அவதானிக்காது புள்ளிகளை தீர்மானித்தன் பின்னர் நியதிகளில் குறிப்பிட்டு காட்டுகின்றனர். அவ்வாறு செய்யாது நியதிகளின் அடிப்படையில் அந்தந்த நியதிகளின் கீழ் கொடுக்கப்படல் வேண்டும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

இறுதிப்புள்ளிகளை இடுவதன் பொருட்டு 1ம் பத்திரத்தின் வலது பக்க மேல் மூலையிலுள்ள கூட்டினை உபயோகித்துக் கொள்ளவும். 11ம், 111ம் பத்திரங்களுக்கும் புள்ளிகள் இட்டதன் பின்னர் 1ம் பத்திரத்தில் அவற்றிற்குரிய கூட்டினுள்ளும் 1ம்,11ம்,111ம் பத்திரங்களின புள்ளிகளின் கூட்டுத்தொகையை உரிய கூட்டினுள்ளும் பிழை இன்றியும் தெளிவாகவும் எழுதுக. புள்ளிகளை பிழையின்றி கூட்டுதல் வேண்டும். புள்ளிகளை குறிக்கும் பொழுது விளக்கமாக இருப்பது அவசியம். அழித்தல், ஒன்றின் மேல் ஒன்றை எழுதுதல் போன்றவற்றை தவிர்த்துக் கொள்ளவும். பிழை ஏற்படின் அதனை தனிக் கோட்டினால் வெட்டி மீண்டும் தெளிவாக எழுதி பின்னர் அவ்விடத்தில் சிற்றொப்பம் இடுக. விபரப் புள்ளித்தாளில் (சிவப்புக்கோடுள்ள) பிழையற்ற முறையில் ஒவ்வொரு பதிவுக்குமுரிய இடங்களில் புள்ளிகளை சரிவரப் பதிந்து இறுதிப்புள்ளியை பதிந்த பின்னர் நேரேயுள்ள கோட்டில் **இறுதிப்புள்ளியை சரியாக எழுத்தில் எழுதுதல் வேண்டும்.**


30க்கு புள்ளியிடும் போது நூறிற்கு எத்தனை என தீர்மானித்து புள்ளியிட வசதியாக கீழே தரப்பட்டுள்ள அட்டவணை அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1.- 01,02,03 | 11.- 34,35,36,37, | 21. – 68,69,70 |
| 2. – 04,05,06,07, | 12. - 38,39,40 | 22.- 71,72,73 |
| 3.- 08,09,10, | 13.- 41,42,43 | 23.- 74,75,76,77 |
| 4. 11,12,13, | 14.- 44,45,46,47 | 24.- 78,79,80 |
| 5.- 14,15,16,17 | 15.- 47,49,50 | 25.- 81,82,83 |
| 6.- 18,19,20 | 16.- 51,52,53, | 26.- 84,85,86,87 |
| 7.- 21,22,23, | 17.- 54,55,56,57 | 27.- 88,89,90 |
| 8.- 24,25,26,27, | 18.- 58,59,60 | 28.- 91,92,93 |
| 9.- 28,29,30 | 19.- 61,62,63, | 29.- 94,95,96,97 |
| 10.-31,32,33 | 20.- 64,65,66,67 | 30.- 98,99,100, |

நோக்கம்:

1. இயற்கை செயற்கைப் பொருட்களின் இயல்பு வடிவமைப்புக்களின் தன்மைகளை விளங்கிக் கொள்ளும் திறன், கோட்பாடுகளை கையாளும் ஆற்றல்களை அளவிடுதல்.
2. இரேகை ஊடகத்தை உபயோகித்து பொருட்களின் இயல்புகள் வெளிப்படும் வகையில் வரைந்து காட்டும் திறன்களையும் ஒருங்கிணைப்புத் திறனை அளவிடுதல்
3. வர்ணத்தை பாவித்துக் கொள்ளும் நுட்பமுறை, பொருட்களின் புற இயல்புகள் வெளிப்படும் வகையில் வர்ணங்களை உபயோகிக்கும் திறனை அளவிடுதல்.

பத்திரம் 11இன் பொருட்டு பரீட்சார்த்திகள் அளித்துள்ள செயல்முறை சித்திரங்கள் இரண்டாகும்.இதில் ஒன்று இரேகை மூலம் பெறப்பட்ட கற்றல். மற்றையது வர்ணவாக்கமாகும். இவ்விரு ஆக்கங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதன் பொருட்டு புள்ளி வழங்கும் திட்டத்தின் நியதிகளை உபயோகித்துக் கொள்ளவும்.



இரேகைக் கற்றல்.

இங்கு எதிர்பார்க்கப்படுவது பரீட்சார்த்தி தம் முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருட் கூட்டம் தொடர்பான ஆரம்ப இரேகைக் கற்றலாகும். சிலர் இதனை விளங்கிக் கொண்டு பகுதிகளாக கற்றுள்ள சந்தர்ப்பங்களை காணக்கூடியதாக இருப்பினும் சில பரீட்சார்த்திகள் தம் முன்னால் காணப்படும் பொருட்கூட்டத்தை முழுமையாக இரேகைச் சித்திரமாக வரைந்து காட்டுவர். ஏவ்வாறாயினும் இச்சித்திரத்தில் இரேகையை கையாளும் திறன்களை வெளிப்படுத்தல் வேண்டும். இதன் அடிப்படையில் பரீட்சார்த்தி இரேகைகள் தொடர்பாக வெளிக்காட்டி இருக்கும்.

நியதியின் அடிப்படையில் இவற்றுக்குரிய புள்ளிகள் ஐந்தில் (5) வழங்கக் கூடிய புள்ளிகளை (ஒவ்வொரு நியதியின் அடிப்படைக்கு ஏற்ப) தீர்மானித்துக் கொள்ளுதல் வேண்டும்.

வர்ணச் சித்திரம்

இங்கு பெரும்பாலும் பொருட்கூட்டத்தின் யதார்த்தத் தன்மையை கொண்ட வர்ணச்சித்திரம் ஒன்று வரைவதையே எதிர்பார்க்கப்படும். இதன் பொருட்டு புள்ளிகளை வழங்கும் நியதிகளின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்ற திறன்களைப் பரீட்சார்த்தி எவ்வளவு தூரம் அண்மித்துள்ளார் என அவதானித்து புள்ளிகளை தீர்மானித்துக் கொள்ளவும். இங்கு தத்தமது தனிப்பட்ட இரசனைகளுக்கு ஏற்ப சித்திரத்தை மதிப்பீடு செய்வதை தவிர்த்துக் கொள்வதுடன் பரீட்சார்த்தி வெளிக்காட்டியுள்ள திறனின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

## புள்ளி வழங்கும் நியதிகள்

| | | |
|---|---|---|
| 1. | இரேகைக் கற்றலின் போது சுதந்திரமாகவும் கருத்துடனும் இரேகையை கையாளுதல் தொடர்பாக வெளிக்காட்டப்பட்ட திறன். | 05 புள்ளிகள் |
| 2. | பரப்பினை கருத்துடன் உபயோகித்துள்ள திறன் | 05 புள்ளிகள் |
| 3. | பொருட்களின் பிரமாணம், இயல்புகளை வெளிப்படுத்தல் | 05 புள்ளிகள் |
| 4. | கோட்பாடுகளைப் பின்பற்றுதல தொடர்பான விளக்கம் (தூரதரிசனம், முப்பரிமான இயல்பு, கண்மட்டம்) | 05 புள்ளிகள் |
| 5. | வர்ணப்பாவனையும் புறவியல்புகளையும் வெளிப்படுத்திக் காட்டல் | 05 புள்ளிகள் |
| 6. | சித்திரத்தின் பொதுவான பூரணப்பாடு | 05 புள்ளிகள் |
| | பத்திரம் 11 க்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அந்தரங்கமானது

சித்திரம் பத்திரம் 1.
நோக்கம் :-

1. செய்முறையினூடாகப் பெறப்பட்ட அறிவுத் திறன், நுட்பமுறை என்பவற்றினால் போசிக்கப்பெற்ற திறன்களையும், சிறப்புத் தன்மைகளையும் பரீட்சித்து அளவிடுதல்.
2. பாரம்பரிய கலைநிர்மாண முறை, சிற்ப முறை, அலங்கரிக்கும் தன்மை, மூலப்பொருட்களின் உபயோகமும் அதனுடன் தொடர்புபட்ட பிரதேசம் பற்றி பெறப்பட்ட அறிவுத் திறனை பரீட்சித்தல்.
3. புகழ் பெற்ற கலைஞர்களையும், அவர்களது கலையாக்கங்கள் பற்றியும் அறிந்து கொள்ளுவதுடன் அவற்றின் பின்னணி ஊடாக பயன்படும் தொனிப்பொருள், ஊடகப்பயன்பாடு, நுட்பமுறை, உணர்ச்சி வெளிப்பாடு தொடர்பான மதிப்பீட்டினையும் இரசனைத் தன்மையினையும் பரீட்சித்தல்
4. இலங்கை, இந்தியா, ஐரோப்பா தொடர்புடைய கலாச்சாரப்பின்னணி பற்றிய அறிவையும் அது தொடர்புடைய திறன்களையும் பரீட்சித்தல்

**பத்திரம்** - 1 க்கு வினாப்பத்திரத்திலேயே விடையளிக்கக் கூடிய வகையில் இப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. 40 வினாக்களைக் கொண்ட இப்பத்திரத்தில் சரியான ஒரு விடைக்கு ‘ ✓ ‘ என்றும், பிழை எனின் ‘X’ என்றும் அடையாளம் இடுதல் வேண்டும். புள்ளியிடும் போது சிவப்பு மையினை பாவித்தல் வேண்டும். ஒவ்வொரு வினா இலக்கத்திற்கு முன்னால் சரி ‘ ✓ ‘, பிழை‘X’ எனும் குறியீட்டினை இடுக. பரீட்சார்த்தி ஏதாவதொரு வினாவிற்கு விடையளிக்காத பட்சத்தில் அவ்வினாவில் உள்ள புள்ளிக் கோட்டின் மீது சிவப்பு மையினால் கோடிட்டு ‘X’ எனும் குறியீட்டை இடுக. வினாப் பத்திரத்திலுள்ள வினாக்கள் பல்வேறு வகையினைக் கொண்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது. படங்கள் ஊடாக விடைகளை ஆராயவும், படங்களை தொடர்புபடுத்தவும், கலையாக்கம் மதிப்பிடுதல் தொடர்பான பல்தேர்வு வினா, இடைவெளிகளை நிரப்புதல், படங்களை கருத்துடன் தொடர்புபடுத்துதல் போன்ற பல்வேறு வகையான வினாக்களைக் கொண்டுள்ளது.

பாடத்திட்ட உள்ளடக்கத்திலிருந்து தயாரிக்கப்பட்ட வினாக்கள் இலகுவானதாக இருந்து முறையாக கடினமானவைகளாக அமைவது வினாத்தாளின் தன்மையாகும். பாடத்திட்டத்திற்கு அமைவாகக் கற்று பரீட்சைக்கு தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கற்று உரிய நோக்கங்களையும் திறன்களையும் பெற்று இருப்பர் எனும் நோக்கத்தில் இவ்வினாப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாணவர் அந்நிலையினை அடைந்துள்ளதும் அல்லது இல்லாததும் வகுப்பறைச் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

இம்முறை வினாப்பத்திரத்தின் தன்மை சிறிது மாற்றம் அடைந்துள்ளது போன்று காணப்படினும் விடய உள்ளடக்கத்தில் எவ்வித மாற்றமும் இடம் பெறவில்லை. இது வினாப்பத்திரத்தின் குணப் பண்பின் மேம்பாட்டின் பொருட்டு மேற்கொண்ட முயற்சியாகும். வகுப்பறை கற்பித்தல் செயற்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தும் உத்தியாகும். ஒரே முறையில் அமையும் வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்கும் செயற்பாட்டை மாற்றி எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கும் வகையில் மாணவர்களை தயார்படுத்தல் வேண்டும்.

வினாப் பத்திரத்தின் பெரும்பாலான வினாக்களுக்கு விடயத்திற்கு ஏற்ப விடையளிக்கலாம் பரீட்சார்த்திகள் தமது இரசனை, திறமை என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து விடையளித்தல் வேண்டும். ஆனால் பரீட்சார்த்திகளால் விளக்கமற்ற முறையில் பலவிதமான விடைகள் அளிக்கப்படுகின்றது. சில விடைகள் அர்த்தமற்றும் எந்தவொரு கலையாக்கமாக ஒப்பிடக்கூடிய விடையாக இல்லாதிருப்பதுடன் அவை கொடுக்கப்பட்ட கலையாக்கம் தொடர்பாக விளக்கமற்று எழுதப்பட்டுள்ளமை வெளிப்படையாக தெரிகின்றது. சில பரீட்சார்த்திகள் கலையாக்கத்தை தெளிவாக விளங்கிக் கொள்ளாமல் அதல் காணப்படுபவை பற்றி விளக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றது. மதிப்பீடு என்பது கலையாக்கத்தை இனங் காணலும், அதன் கலைப் பெறுமானத்தினை விளங்கி இரசனையுடன் விமர்சித்தலாகும். கலையாக்கத்தை பாண்டப் பொருளாகக் கருதி விமர்சித்தல் மதிப்பீடு அல்ல. ஆகையினால் புள்ளி வழங்கும் போது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

உ-ம் : தூரதரிசனம்.

# பத்திரம் 111 ' அ ' படவாக்கம்

நோக்கம் :-

'சூழலில் காணப்படும் இயற்கை செயற்கைப் பொருட்களின் இயல்பு அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்வுகள் செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களை சித்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்ற ஆக்கச்சிறப்புடன் கூடிய ஆற்றலையும் நயத்தல் திறனையும் மதிப்பீடு செய்தல்.

இங்கு பரீட்சார்த்திகள் ஒவ்வொருவரும் தெரிவு செய்து கொள்ளும் தலைப்பிற்கு ஏற்ப வரைந்து கொள்ளும் போது பல்வேறுபட்ட மட்டங்களில் திறமைகளை வெளிப்படுத்தியுள்ளதை காணலாம். இரேகைகளைக் கையாண்டு வடிவமைப்புக்களை வெளிப்படுத்தும் பொழுது குறைந்த மட்ட திறமையும், உயர்மட்டத் திறமையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

மனித வடிவங்களை வரையும் போது இது போன்ற வேறுபாடுகளைளக் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் வரலாம். வர்ணப் பாவனையின் போது பல்வேறுபட்ட நுட்ப முறைகளை கையாண்டு உயர்மட்டத் திறனை வெளிக்காட்டுபவர்களிடையே செயன்முறைத் திறன் அற்றவர்களும் காணப்படுவர். ஆகையினால் ஒவ்வெரு பரீட்சார்த்திகளும் வெளிக்காட்டியுள்ள செயன்முறைத் திறனை இனங்கண்டு அதன் பிரகாரம் நியதிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளிகளைத் தீர்மானித்து வழங்குதல் வேண்டும். இங்கு தனிப்பட்ட இரசனைகளுக்கு இடமளிக்காது புள்ளிகளை வழங்குக.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தெரிவு செய்த தலைப்பிற்கு பொருத்தமான சூழலையும் நிகழ்வுகளையும் வெளிப்படுத்தியுள்ள தன்மை. | 06 புள்ளிகள் |
| 2. | மனித மெய்நிலைகள் பிராணிகள் உட்பட சகல வடிவமைப்புகளையும் தளத்தில் படவாக்கம் செய்துள்ள தன்மை | 06 புள்ளிகள் |
| 3. | இரேகைகள் வடிவமைப்புக்களில் காணப்படும் சிறப்புத் தன்மை | 06 புள்ளிகள் |
| 4. | வர்ண ஊடகத்தை உபயோகித்துள்ள திறன் | 06 புள்ளிகள் |
| 5. | பொதுப் " ரணப்பாடு | 06 புள்ளிகள் |
| | பத்திரம் 111 அ பகுதிக்கான முழுப்புள்ளிகள் | 30 புள்ளிகள் |

# பத்திரம் 111 ' ஆ ' அலங்கார ஆக்கம்

**நோக்கம்:-**

அன்றாட வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறுப்டட சந்தர்ப்பங்களும் தொடர்பாடல் செயற்பாடுகளும் தேவையான ஆக்கங்களைத் திட்டமிடுதல் அலங்கரித்தல் தொடர்பாக பரீடசார்த்தி பெற்றுள்ள திறன்களைப் பரீட்சித்தல்.

பத்திரம் 111ற்கு விடையளிக்கும் பொழுது அதிகமான பரீட்சார்த்திகள் ' ஆ ' பகுதியையே தெரிவு செய்கின்றனர் எனத் தெரிகின்றது. அவர்களிடையே பெரும்பாலானோர் கோட்பாடுகள் தொடர்பான விளக்கத்துடன் புதிய தன்மையில் அலங்கார ஆக்கங்களை நிர்மாணித்து உள்ளது போல் விளக்கமற்று அலங்கார ஆக்கங்களை நிர்மாணிப்போர் பலர் உள்ளனர். எவ்வாறாயினும் பரீட்சார்த்திகளின் ஆக்கங்களில் வெளிக் காணப்படுகின்ற அவர்களது ஆற்றல் திறமைகள் அவர்களது முன் அனுபவங்களின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும். அவர்களின் ஆக்கங்களின் திறமைகளை அவதானித்து புள்ளி வழங்கும் நியதிகளின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தொனிப் பொருளுக்கு பொருத்தமான புதிய ஆக்கச் சிறப்புடையதாக திட்டமிட்டு கொள்ளும் திறன். 06 புள்ளிகள்
2. பாவனைக்கு உகந்த வகையிலும் கைத்தொழிலுக்கு பொருத்தமுடையதாகவும் இருத்தல் 06 புள்ளிகள்
3. இரேகை வடிவமைப்புக்களை கருத்துள்ள தன்மையில் உபயோகிக்கின்ற திறமை. 06 புள்ளிகள்
4. பொருத்தமான வர்ணத் தேர்வும் உபயோகிக்கின்ற திறனும் 06 புள்ளிகள்
5. அலங்கார அழகும் நிர்மாணிப்பின் பூரணப்பாடும். 06 புள்ளிகள்

பத்திரம் 111 ஆ பகுதிக்கான முழுப்புள்ளிகள் 30 புள்ளிகள்

## பத்திரம் 111 ‘ இ ‘ கிரபிக் சித்தரம்

**நோக்கம்:-**

விளம்பரம் அச்சிடல் வர்த்தக நோக்கு போன்றவற்றிற்கு அமைய திட்டமிட்டு வெளிப்படுத்தி உள்ளனரா என்பதை அறிதல்.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியாகும். வகுப்பறையில் கற்ற விடயங்களையும் நுட்பங்களையும் சிறப்பு அம்சங்களையும் இப்பகுதி ஊடாக வெளிப்படுத்துவர்.

மதிப்பிடும் பொழுது தேர்ச்சி மட்டத்தை நன்கறிந்து புள்ளி வழங்கப்பட வேண்டும்.

**புள்ளி வழங்கும் நியதிகள்**

1. தலைப்புக்கு பொருத்தமான புதிய உத்திகளை பயன்கடுத்தி திட்டமிடல் 06 புள்ளிகள்
2. தொடர்பாடல் காரியத்தின் வெற்றி 06 புள்ளிகள்
3. வடிவங்களை ஒன்றிணைக்கும் போது கலையமசத்துடன் நிர்மாணித்தல் 06 புள்ளிகள்
4. வர்ணத்தை தெரிவு செய்தலும் அதனை பயன்படுத்தும் விதமும். 06 புள்ளிகள்
5. பல்வேறுப்பட்ட அழகு பிரபல்யமான நிர்மாணத்தின் சிறப்பியல்பு 06 புள்ளிகள்

பத்திரம் 111 இ பகுதிக்கான முழுப்புள்ளிகள் 30 புள்ளிகள்

விடைத்தாள் மீளாய்வு செய்யும் போது சில பரீட்சகர்களினால் செய்யப்பட்ட பாரதூரமான பிழைகள் பல அறிக்கைப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் பல உள்ளன.அவை போன்ற பிழைகள் எறபடாது பார்த்துக் கொள்ளுவது பரீட்சகர்களின் கடமையாகும்.

## அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள சில பிழைகள்.

1. சரியான சில விடைகளுக்கு பிழை என ( x ) குறிக்கப்பட்டும் பிழையான விடைக்கு ( ✓) எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.
2. சில விடைகளுக்கு சரி, பிழை (✓,X ) என எவ்வித குறியும் இடாமை.
3. விடைத்தாள் திருத்தும் பொழுது இடப்படும் (✓,X ) குறியீடுகள் விளக்கமற்று காணப்படுதல்.
4. புள்ளிகளை கூட்டும் போது ஏற்பட்டுள்ள பிழைகள்.
5. 11ம், 111ம் பத்திரத்து புள்ளிகளை முன்பக்கத்தில் பதியும் போது ஏற்பட்ட பிழை.
6. முன்பக்க புள்ளிகளை இறுதிப் புள்ளிப் பட்டியலில் உள்ளடக்கும் போது ஏற்பட்ட பிழை.
7. வினாப்பத்திரங்களுக்குரிய இறுதிப் புள்ளியைச் சுற்றி வட்டமிடாமை.
8. இறுதிப் புள்ளிகளில் காணப்படும் எண்கணிதப் பிழைகள்.
9. 11ம், 111ம் விடைத்தாள்கள் முறையாக மதிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் அல்லது மிக உயர் தரத்தில் திறனினை வெளிப்படுத்திய விடைத்தாளுக்கு குறைந்த புள்ளியும், தரமற்ற பத்திரத்திற்கு கூடிய புள்ளிகள் வழங்கப்பட்டிருத்தல்.
10. திட்டமிட்டு சில விடைப்பத்திரத்திற்கு சித்தி, சிறப்புச்சித்தி வழங்கியுள்ளமை.

இது போன்ற பல தவறுகளை குறிப்பிட முடியும் இவற்றுள் பாரதூரமான தவறுகள் பகுதி 11, 111ல் ஏற்படுகின்ற மிகக் கூடிய குறைந்த மதிப்பீடாகும். இதனால் மீளாய்வின் போது பெருமளவு மாற்றங்கள் ஏறபட்டுள்ளது. எனவே பரீட்சகர்கள் மிகுந்த கவனம் எடுத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்தில் பொண்டு மதிப்பீட்டுப் பணிகளை சிறந்த முறையில் செயற்படுத்தி புள்ளிப் பட்டியலை முறையாக தயாரித்துக் கொள்ளுவதன் மூலம் சிறப்பாக மதிப்பீட்டில் பங்களிப்புச் செய்தல் தேசியப்பணியாகும்.

முக்கிய குறிப்பு:
பிரதம பரீட்சகர்களினால் பூரணப்படுத்தப்பட்ட RD/16/3/O/L எனும் படிவத்தினை பிரதம கட்டுப்பாட்டு பரீட்சகருக்கு தபாலிடவும்.